# நம்மாழ்வார் திருவாய் மலர்ந்தருளிய
# திருவாய்மொழி 7-9 - என்றைக்கும்

**(எம்பெருமான் தனக்கும் தன் அடியார்க்கும் இனிதாகக் கவி பாடும்படி தம்மை இங்கு வைத்ததற்குக் கைம்மாறு இல்லாமையை ஆழ்வார் அருளிச் செய்தல்)**

3425 * என்றைக்கும் என்னை * உய்யக் கொண்டு போகிய *
அன்றைக்கு அன்றென்னைத் * தன்னாக்கி என்னால் தன்னை **
இன்தமிழ் பாடிய ஈசனை * ஆதியாய்
நின்ற என் சோதியை * என் சொல்லி நிற்பனோ? 1

3426 என் சொல்லி நிற்பன்? * என் இன்னுயிர் இன்றொன்றாய் *
என் சொல்லால் யான் சொன்ன * இன்கவியென்பித்து **
தன் சொல்லால் தான் தன்னைக் * கீர்த்தித்த மாயன் * என்
முன் சொல்லும் * மூவுருவாம் முதல்வனே 2

3427 ஆமுதல்வன் இவன் என்று * தற்றேற்றி[1] * என்
நாமுதல் வந்து புகுந்து * நல்லின்கவி **
தூமுதல் பத்தர்க்குத் * தான் தன்னைச் சொன்ன * என்
வாய்முதல் அப்பனை * என்று மறப்பனோ? 3

3428 அப்பனை என்று மறப்பன்? * என்னாகியே *
தப்புதல் இன்றித் * தனைக் கவி தான் சொல்லி **
ஒப்பிலாத் தீவினையேனை * உய்யக் கொண்டு *
செப்பமே செய்து * திரிகின்ற சீர் கண்டே 4

3429 சீர் கண்டு கொண்டு * திருந்து நல்லின்கவி *
நேர்பட யான் சொல்லும் * நீர்மை இலாமையில் **
ஏர்விலா என்னைத் * தன்னாக்கி என்னால் தன்னை *
பார் பரவு இன்கவி * பாடும் பரமரே 5

3430 இன்கவி பாடும் * பரம கவிகளால் *
தன்கவி தான் தன்னைப் * பாடுவியாது ** இன்று
நன்கு வந்து என்னுடனாக்கி * என்னால் தன்னை *
வன்கவி பாடும் * என் வைகுந்த நாதனே 6

3431 வைகுந்த நாதன் * என[2] வல்வினை மாய்ந்தற *
செய்குந்தன் தன்னை * என்னாக்கி என்னால் தன்னை **
வைகுந்தனாகப் * புகழ வண்தீங்கவி *
செய்குந்தன் தன்னை * எந்நாள் சிந்தித்தார்வனோ? 7

---
[1] தன்தேற்றி
[2] என்

3432 ஆர்வனோ? ஆழியங்கை * எம்பிரான் புகழ் *
பார் விண் நீர் முற்றும் * கலந்து பருகிலும் **
ஏர்விலா என்னைத் * தன்னாக்கி என்னால் தன்னை *
சீர் பெற இன்கவி * சொன்ன திறத்துக்கே 8

3433 திறத்துக்கே துப்புரவாம்[3] * திருமாலின் சீர் *
இறப்பு எதிர்காலம் * பருகிலும் ஆர்வனோ? **
மறப்பிலா என்னைத் * தன்னாக்கி என்னால் தன்னை *
உறப்பல இன்கவி * சொன்ன உதவிக்கே 9

3434 உதவிக் கைம்மாறு * என்னுயிர் என்ன உற்றெண்ணில் *
அதுவும் மற்றாங்கவன் தன்னது * என்னால் தன்னை **
பதவிய இன்கவி * பாடிய அப்பனுக்கு *
எதுவும் ஒன்றுமில்லை * செய்வது இங்குமங்கே 10

3435 * இங்கும் அங்கும் * திருமால் அன்றி இன்மை கண்டு *
அங்ஙனே வண்குருகூர்ச் * சடகோபன்[4] **
இங்ஙனே சொன்ன * ஓராயிரத்து இப்பத்தும் *
எங்ஙனே சொல்லினும் * இன்பம் பயக்குமே 11

**அடிவரவு:** என்றை என் ஆமுதல்வன் அப்பன் சீர் இன் வைகுந்த ஆர்வனோ
திறத்து உதவி இங்கும் இன்பம்

[3] துப்பரவு
[4] சடகோபன் சொல்